**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 31.10.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தக்காளியில் புலம் பெயர் பூச்சி ஊசித்துளைப்பான் சேதம் அறிகுறி கண்டறிதல் மற்றும் ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு வழிமுறைகள்

உலக காய்கறிகள் மையம், தைவான் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை இணைந்து தக்காளியில் புலம்பெயர் பூச்சியான ஊசித் துளைப்பானை ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்தவது குறித்த ஒரு நாள் திறன் வளர்ப்புப் பயிற்சி தமிழ்நாடு அரசு தோட்டக்கலை அலுவலர்களுக்கு **27.10.2022** அன்று பூச்சியியல் துறையில் நடைபெற்றது.

இந்த பயிற்சியில் முனைவர்.மூ.சாந்தி, இயக்குநர், பயிர்ப் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை அவர்கள் தலைமை ஏற்று தக்காளிப் பயிரை தாக்கும் புலம் பெயர் பூச்சிகள் மற்றும் தற்சார்பு முறையில் அவற்றை கட்டுப்படுத்தவது குறித்த விளக்க உரை ஆற்றினார். முனைவர்.வெ.பாலசுப்ரமணி, தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்கள் புலம்பெயர் பூச்சிகள் குறித்து சிறப்புரையாற்றினார். இந்த பயிற்சியில் முனைவர்.பவுலா சொட்டிலோ கார்டோனா, விஞ்ஞானி, உலக காய்கறி மையம், தைவான் அவர்கள் தோட்டக்கலை அலுவலர்களுக்கு பூச்சி கொல்லிகளால் ஏற்படும் விளைவுகளையும் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் பாதுகாப்பு வழிமுறைகளை எளிய முறையில் கடைபிடிக்கும் உத்திகளையும், தக்காளிப் பயிரில் அவற்றை பின்பற்றுவதால் ஏற்படும் நன்மைகளையும் எடுத்துரைத்தார். முனைவர்.செ.வ.கிருஷ்ணமூர்த்தி, பேராசிரியர் மற்றும் தலைவர், பூச்சியியல் துறை, முனைவர்.கா.கார்த்திகேயன், பேராசிரியர் மற்றும் தலைவர், நோயியல் துறை மற்றும் முனைவர்.அ.சாந்தி, பேராசிரியர் மற்றும் தலைவர், நூற்புழுவியல் துறை அவர்கள் இப்பயிற்சியின் முக்கியத்துவம் மற்றும் தனித்தன்மைகள் குறித்த சிறப்பு விளக்கம் அளித்தனர். முன்னதாக முனைவர்.மா.முருகன், பேராசிரியர், பூச்சியியல் துறை அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். முனைவர்.ந.ஆனந்தராஜா, பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் விரிவாக்க பயிற்சி மையம் அவர்கள் கலந்த கொண்ட அலுவலர்களின் இப்பயிற்சி சார்ந்த திறன் மதிப்பீட்டை ஆய்வு செய்து உரையாற்றினார்.

முனைவர்.ந.மணிகண்டபூபதி, பேராசிரியர் (உயிா் தொழில்நுட்பவியல்) அவர்கள் தோட்டக்கலைப் பயிா்களில் வைரஸ் நோய் மற்றும் கட்டுப்படுத்தும் வழிமுறை குறித்து உரையாற்றினாா். பூச்சியின் வாழ்க்கைச்சரிதம் மற்றும் தாக்குதல் அறிகுறிகள் அடங்கிய மாதிரிகள் காட்சிப்படுத்தப்பட்டது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த பூச்சியின் வாழ்க்கைச்சுழற்சி மற்றும் ஒருங்கிணைந்த கட்டுப்பாடு உள்ளடக்கிய பயிற்சி தொழில்நுட்ப கையேடு அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் சுமாா் 50ற்கும் மேற்பட்ட உதவி தோட்டக்கலை அலுவலா்கள் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்து கலந்து கொண்டு பயன் அடைந்தனா். இப்பயிற்சியின் தொடா்ச்சியாக பிற்பகலில் தொண்டாமுத்தூா் வட்டாரம், வண்டிக்காரனூா் பிரிவு கிராமத்தில், தக்காளியில் ஊசி துளைப்பான் மேலாண்மை குறித்த நேரடி செயல் விளக்க திடல்களைப் பாா்வையிட்டு பயன்பெற்றனா். இறுதியாக முனைவா்.பா.ச.சண்முகம், இணைப் பேராசிரியா், பூச்சியியல் துறை அவா்கள் நன்றியுரையாற்றினாா்.

**மக்கள் தொடா்பு அலுவலா்**